00142

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்

சட்டக் கற்கைகள் திணைக்களம்

சட்டமாணிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 04

இறுதிப் பரீட்சை - 2021/2022

குற்றவியல் சட்டம்- **LWU2312/LLU4806**

காலம்: மூன்று (03) மணித்தியாலம்

திகதி: 17.01.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப. 04.30

வினாக்களின் எண்ணிக்கை: எட்டு (08).

ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. “... குற்றத்தின் இரு கூறுகளும் இணைந்து இயங்க வேண்டும் என்பதுடன், வெளிப்படையான செயல் இல்லாத குற்ற எண்ணத்திற்கான சான்று அல்லது ஏதேனும் குற்றவியல் எண்ணம் மூலம் செயற்படுத்தப்பட்டது எனக் காட்டப்படாத செயல் என்பனவற்றால் குற்றத்தை நிர்ணயிக்க இயலாது. குற்ற வழக்குத் தொடர்வு ஆனது இரு கூறுகளையும் குறித்த குற்றத்தை ஆக்கியது என நிறுவ வேண்டும்...”

   per T. Chand.J,in *Mohinder Singh* Vs *The State* (AIR 1960 PH135)

   மேலுள்ள கூற்றின் அடிப்படையில் குற்றம் ஒன்றின் ஆக்கக்கூறுகளை நுணுக்கமாக ஆராய்க.

   உமது விடையை பொருத்தமான தீர்ப்புச் சட்டம் மற்றும் நடைமுறை உதாரணங்கள் கொண்டு ஆதாரப்படுத்துக.

   (20 புள்ளிகள்)

2. விதுர என்பவன் ஒரு தனியார் வங்கியின் இளைய நிர்வாகி ஒருவன் ஆவான். ஒரு வெள்ளிக்கிழமை இரவு அன்று, நகர்புற உணவகம் ஒன்றில் இரவு உணவை அவன் தனது நண்பர்களுடன் உண்டான். அவனது நண்பர்கள் அவனது வீட்டிற்கு அழைத்துச்செல்ல கோரியதை மறுத்த அவன், ஏறத்தாள பி.ப. 11.30 அளவில் ஒரு முச்சக்கர வண்டியில் உணவகத்தை விட்டு நீங்கினான். நகர்புற எல்லைகளுக்கு அப்பால் ஒரு தனிமையான பகுதியில், அப்பகுதியின் மோசமான குற்றவாளி ஒருவனான சீரா என்பவன் துப்பாக்கியுடன், முச்சக்கர வண்டியை நிறுத்துமாறு சமிக்ஞை செய்தான். முச்சக்கர வண்டியில் இருந்து விதுரவை வெளியே இழுத்த சீரா, அவனது தொண்டையில் துப்பாக்கியை அழுத்தி , அவனது சகல பெறுமதிமிக்கவற்றையும் சீராவிடம் கொடுக்காதபட்சத்தில் அவனைக் கொல்வதாக அச்சுறுத்தினான். பயமுற்ற முச்சக்கரவண்டியின் சாரதி உதவி கோரி கத்தியவாறு அவ்விடத்தைவிட்டு ஓடினான். தனது வாழ்வின் மீது மிகுந்த பயம் கொண்டிருந்த விதுர, அவனது தங்க மாலை, கைக்கடிகாரம் மற்றும் பணப்பை என்பவற்றினை சீராவிடம் கொடுத்தான்.அவ்விடத்திற்கு பொலிஸ்படை வருவதைக் கண்ட சீரா, தங்கமாலையுடன் மாத்திரம் ஓடிச்சென்றான்.

   மேலுள்ள சம்பவத்தை ஆராய்ந்து சீராவின் குற்றத்தை இலங்கையின் தண்டனைச் சட்டக் கோவையினது பொருத்தமான பிரிவுகளுடனும், தீர்ப்புச் சட்டங்களுடனும் ஆராய்க.

   (20 புள்ளிகள்)

3. கீழ்வரும் கூற்றுக்களை பொருத்தமான நியதிச்சட்ட உறுப்புரைகள் மற்றும் மற்றும் தீர்ப்புச் சட்டங்கள் என்பனவற்றுடன் நுணுக்கமாக ஆராய்க.

அ) இலங்கை குற்றவியல் தண்டணைச்சட்ட கோவையின் பிரிவு 77 ஆனது எம்நாட்டன் விதிகளின் (*M' Naghten Rules*) வெறுமனான ஒரு பிரதிபலிப்பு ஆகும்.

ஆ) குறித்த ஒரு நியதிச் சட்டம் வெளிப்படையாக அதன் பிரயோகத்தன்மையை விலக்கும்வரை, நிகழ்வு ரீதியான தவறுக்கான எதிர்வாதம் ஆனது சகல குற்றங்களிற்கும் பிரயோகிக்கப்படும் என்பது இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நிலைப்பாடு ஆகும்.

**(10x02= 20** புள்ளிகள்)

4. "…. இன்னொருவரது உடைமையில் இருந்து ஆதனம் ஒன்று எடுக்கப்படும் குற்றவியல் கையாடலிற்கான குற்றச்சாட்டின் போதான சகல அதிகார சபைகளின் மீதுமான என் கருத்தானது , திருட்டுக்குற்றம் மற்றும் இழைக்கக்கூடிய பிற குற்றங்கள் என்பவற்றில் இருந்து இக்குற்றத்தின் தன்மையானது வேறுபடுத்தப்பட ஆரம்பத்தில் அவ்வாறு எடுத்தல் மோசடியற்றதாக இருத்தல் வேண்டும். இல்லாதபோது இது குறித்து நோக்குகையில் குற்றவியல் கையாடல் மற்றும் திருட்டு மற்றும் ஏமாற்றுதல் முதலான குற்றங்களுக்கு இடையிலான வரையறையை தெளிவற்றதாக்கும்."

Per Weeramantry J in *Ranasinghe* Vs *Wijendra* (1970) 74 NLR 38 at page 43

இலங்கையில் ஆதனத்தை குற்றக்கையாடல் குற்றத்தினை (Offence of Criminal Misappropriation) ஆளும் தற்போதைய சட்டத்தின் சரியான நிலைப்பாட்டை மேலுள்ள கூற்று பிரதிபலிக்கிறதா?

பொருத்தமான நியதிச்சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்கள் என்பவற்றை எடுத்துக்காட்டி நுணுக்கமாக ஆராய்க.

(20 புள்ளிகள்)

5. பெரேரா என்பவனது இடத்தில் இடம்பெற்ற புதுவருடக் கொண்டாட்டத்தில் விருந்தினர்களுக்கு அதிக அளவில் உணவும் மதுபானமும் வழங்கப்பட்டது. சில மதுபான குவளைகளை அருந்திய ஜோன் என்பவன், தற்செயலாக ஒரு இளம்பெண்ணின் மடியில் வீழ்ந்தான். ஜோனை முறையே நடந்துகொள்ளுமாறு கத்திய பெரேரா அப்பெண்ணிடம் மன்னிப்பு கோருமாறு கூறினான். பதிலுக்கு கத்திய ஜோன் அவ்வாறு செய்ய மறுத்ததுடன், பெரேராவால் இயலுமெனின் அவனை அக்கொண்டாட்டத்தில் இருந்து வெளியகற்றுமாறு சவாலிட்டான். ஒரு வெற்று மதுபான போத்தலை எடுத்த பெரேரா அதை உடைத்து, உடைந்த போத்தலால் ஜோனின் மார்பின் மீது தாக்கினான். இத்தாக்குதலை தடுக்க இடையிட்ட சிவா எனும் மற்றொரு விருந்தினரையும் பெரேரா தாக்கியதுடன், அவனது வயிற்றில் காயத்தை ஏற்படுத்தினான். ஜோன் மற்றும் சிவா ஆகிய இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். மறுநாள் காயங்களால் ஜோன் மரணமுற்றான். சிவாவின் காயங்கள் குணமாகத் தொடங்கியதால், அவன் பத்து நாட்களின் பின்னர் வைத்தியசாலையில் இருந்து விடுவிக்கப்பட்டான்.

பெரேராவின் குற்றப்பொறுப்புடைமையை ஆராய்வதுடன், அவனுக்கு கிடைக்கக்கூடிய எதிர் வாதங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை கணிக்க.

(20 புள்ளிகள்)

6. கம்பஹாவின் புறநகர்ப்பகுதியில் வாழும் 23 வயதான சதுர என்பவனும் 14 வயதான துலினியும் அயலவர்கள் ஆவர். சதுரவுடனும் அவனது இரு சகோதரிகளுடனும் துலினி மிக நட்புடன் இருந்தாள். ஒரு ஞாயிறு அன்று கம்பஹா நகரில் உள்ள ஒரு திரையரங்கு ஒன்றில் புதிய திரைப்படம் ஒன்றைக் காணச்செல்ல துலினியை தம்முடன் இணையுமாறு சதுரவின் சகோதரிகள் அழைத்தனர். முதலில் துலினியின் தாய் துலினி அவர்களுடன் செல்வதை மறுத்த போதும், அப்பெண் பிள்ளைகளது தொடர்ச்சியான வேண்டுகோள்களின் காரணமாக அவர் தனது இணக்கத்தை வழங்கினார்.

துலினி அவர்களுடன் மகிழ்ந்து சென்றதுடன், விரைவில் விடு திரும்புவதாகவும் வாக்குறுதி அளித்தாள். வாக்குறுதி அளித்தவாறு நள்ளிரவு வரை துலினி வீடு திரும்பாததமையால், அவளது தாய் அவளைப் பற்றி விசாரிக்க சதுரவின் வீட்டிற்கு சென்றாள்.அவ்வேளையில் சதுரவின் சகோதரிகள் இருவரும் அங்கிருந்ததுடன், துலினியின் தாய் துலினி எங்கே என விசாரித்த போது, சதுரவின் சகோதரிகள் துலினியும் சதுரவும் திரைப்படட இடைவேளையின் போது திரையரங்கை விட்டுச்சென்றதாக கூறினர். அதே தினம் துலினியின் தாய், தனது பராயமடையாத மகளை வற்புறுத்தி சதுர அழைத்துச்சென்றுள்ளதாக சதுரவிற்கு எதிராக புகார் ஒன்றை அளித்தாள். மூன்று நாட்களின் பின்னர் துலினியும் சதுரவும் கண்டியில் உள்ள ஒரு இடத்தில் கண்டறியப்பட்டனர். துலினி 18 வயதுடையவள் எனக்குறிப்பிடப்பட்டு திருமணப் பதிவிற்கான எண்ண அறிவித்தல் ஒன்று சதுரவால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

இலங்கையின் குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் துலினியை அவளது சட்ட ரீதியான கட்டுக்காவலில் இருந்து கடத்தியமைக்காக சதுர குற்றம் சாட்டப்பட்டுள்ளான்.

பொருத்தமான நியதிச்சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்கள் என்பவற்றை எடுத்துக்காட்டி ஆராய்க.

**(20 புள்ளிகள்)**

7. "…. ஒரு பெண் தன்னை சுதந்திரமாக சமர்ப்பிக்க உடன்படுவதே அவள் இணக்கம் தெரிவிப்பதாகும். இது எப்போதும் மற்றையவரால் செய்யப்பட வேண்டும் என எடுத்துரைக்கப்படுவதையும் அதனாலதையும் உணர்ந்து ஏற்பதும் தன்னிச்சையானதும் ஆகும். பாலியல் உடலுறவுக்கான இணக்கத்திற்கும் சமர்ப்பணத்திற்கும் இடையில் வேறுபாடு ஒன்று காணப்படுகிறது. ஒவ்வொரு இணக்கமும் சமர்ப்பணத்தை காட்டும் போதும் , சமர்ப்பணம் இணக்கத்தை காட்டாது. வெறும் சமர்ப்பணத்தை காட்டும் செயல் இணக்கத்தை காட்டாது…"

Per J.A.N. de Silva J, in *Inoka Gallage Vs Kamal Addararachchi and Another* (2002) 1 SLR 307 at page 311

மேலுள்ள கூற்றின் பின்னணியில் பாலியல் வல்லுறவு குற்றம் தொடர்புடைய சட்டத்தை 22 ஆம் இலக்க 1995 ம் ஆண்டின் குற்றவியல் தண்டனைச்சட்ட கோவையின் (திருத்தப்பட்டவாறான) பிரிவுகளின் மீது சிறப்பு கவனம் செலுத்தி நுணுக்கமாக ஆராய்க.

**(20 புள்ளிகள்)**

8. கீழ்வருவன மீது குறிப்புகள் எழுதுக.

அ) குற்றம் எனும் கருத்தேற்பும் குற்றத்திற்கான வரைவிலக்கணத்தின் பல்வேறு அணுகுமுறைகளும்

ஆ) இலங்கையின் குற்றவியல் நீதி நிர்வாகத்தில் தொடர்புற்றுள்ள பல்வேறு அரச முகவராண்மைகளும் அவற்றின் குறித்த செயற்பாடுகளும்

**(10x02= 20 புள்ளிகள்)**

*பதிப்புரிமை பெற்றது*